சுருக்கம்

சமூக நீதித்துறை - போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் - 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினைச் செயல்படுத்த மாநில அரசின் பங்குத்தொகை ரூ.10,70,49,667/-னை SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதியளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நீதித்(ஆதிந-3)துறை

அரசாணை (ப) எண்.132

நாள் : 10.08.2026
பராபவ வருடம்,
ஆடி மாதம், 25-ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2057.

படிக்கப்பட்டது.

1. அரசு கடித எண்.2048/ஆதிந3/2026-1, நாள்.23.05.2026.
2. பழங்குடியினர் நல இயக்குநரின் கடித ந.க.எண். பமே/ஏ1/3293/2026, நாள் : 22.06.2026.
3. அரசாணை (ப) எண். 105, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-3) துறை, நாள்:01.07.2026.

ஆணை:-

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், ஒன்றிய அரசால் வழங்கப்பட்ட முதன்மை ஒப்புதலுக்கேற்ப (Mother Sanction), 2026-2027 ஆம் ஆண்டிற்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், பழங்குடியினர் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்குவதற்காக மாநில அரசின் 25% பங்குத் தொகையாக ரூ.14,28,66,667/- தேவைப்படுகிறது எனவும், இதன் மூலம் மொத்தம் ரூ.57,14,66,667/ (ரூபாய் ஐம்பத்து ஏழு கோடியே பதினான்கு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து அறுநூற்று அறுபத்து ஏழு மட்டும்) கீழ்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

முதன்மை ஒப்புதல் (Mother Sanction)	பங்குத் தொகை	தொகை (ரூ)
Post-Matric Scholarship – TN40	ஒன்றிய அரசின் பங்கு (75%)	42,86,00,000/
	மாநில அரசின் பங்கு (25%)	14,28,66,667/-
	மொத்தம்	**57,14,66,667/-**

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தினைச் செயல்படுத்த 2026 2027 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் மதிப்பீட்டில் (I.B.E 2026-2027) போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை (Post-Matric Scholarship) திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒன்றிய அரசின் 75% பங்கு தொகை ரூ.34,83,13,000/- மற்றும் மாநில அரசின் 25% பங்கு தொகையாக ரூ. 11,61,04,000/- சேர்த்து மொத்தம் ரூ. 46,44,17,000/- (ரூபாய் நாற்பத்தாறு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து பதினேழாயிரம் மட்டும்) முதற்கட்டமாக பழங்குடியின மாணாக்கருக்கு கல்வி உதவித்தொகை வழங்க விடுவித்து, அத்தொகையினை SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்தும், மேலும், கூடுதலாக கோரப்படும் தொகை ரூ. 10,70,49,667/- (ரூபாய் பத்து கோடியே எழுபது இலட்சத்து நாற்பத்தொன்பது ஆயிரத்து அறுநூற்று அறுபத்தேழு மட்டும்) நிதி ஒதுக்கீடு பெற்ற பின் விடுவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

3. மேற்காணும் அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு, 2026-2027 ஆம் கல்வியாண்டில் பயிலும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்க ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை திட்டத்திற்காக திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.10,70,49,667/- (ரூபாய் பத்து கோடியே எழுபது இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்து ஏழு மட்டும்) விடுவித்து அத்தொகையினை SNA-SPARSH முறையில் செலவினம் மேற்கொள்ள அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது

4. மேலே பத்தி 3 - இல் அனுமதிக்கப்பட்ட தொகை கீழ்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

கணக்குத் தலைப்பு	தொகை
2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் - 02 பழங்குடியினர் நலன் 277 கல்வி - மத்திய மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் UA பழங்குடியினர் மாணவர்களுக்கான மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு கல்வி உதவித் தொகை - 312 - படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் - 02 - மெட்ரிக் படிப்புக்கு மேல்படிப்பு, DPC: 2225 02 277 UA 31202	ரூ.10,70,49,667/-

(ரூபாய் பத்து கோடியே எழுபது இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்து ஏழு மட்டும்)

5. மத்திய அரசின் நிதி சார்ந்த வழிகாட்டுதல்களின் படி கட்டாயமாக்கப்பட்டுள்ள SNA-SPARSH என்னும் புதிய நிதி தொகுப்பின் மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இத்திட்டத்தில், எந்த ஒரு கணக்குத் தலைப்பின் கீழ் 100 சதவீதம் நிதியை பெறுவதற்கு SNA-SPARSH platform பட்டியல் மூலம் IFHRMS-ல் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. இதில், மத்திய மற்றும் மாநில அரசின் பங்கீடானது கணினி வழியாக தன்னிச்சையாக

பிறப்பிக்கப்படும் (இதன் பின்னர், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கென்று தனித்தனியான கணக்குத் தலைப்பு என்னும் முறை இல்லை).

6. இத்திட்டத்தின் கீழான, அனைத்து மாவட்ட பணம் பெற்று வழங்கும் அலுவலர்களால் ஒப்புதல் அளிக்கப்படும் தொகையானது, அரசாணையில் அனுமதிக்கப்பட்ட தொகையை விட அதிகமாக இருக்க கூடாது என்பதை உறுதி செய்து கொள்ளுமாறும், அரசு கடிதம் 573, நிதி(PFMS)த் துறை, நாள்.06.01.2025 மற்றும் 17.02.2025-இல் வழங்கப்பட்டுள்ள SNA-SPARSH வழிகாட்டுதல்களை தவறாது பின்பற்றும்படியும், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், பத்தி 3-5 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை உறுதி செய்துகொள்ளும்படியும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.2675/நிதி(ஆதி(ம)பந)துறை/2026, நாள்:13.07.2026-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

டாக்டர். என். சுப்பையன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-600 005.
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-600 005.
மாநில கணக்காயர், சென்னை -600 0018.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-600 008.
உள்ளுறை தணிக்கை அலுவலர், சென்னை-600 009.

நகல்

மாண்புமிகு அமைச்சர் (சமூக நீதி) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-600 009.
சமூக நீதித் துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
நிதித் (ஆதி(ம)பந) துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

அரசு சார்புச் செயலாளர்
சமூக நீதித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை-600 009.

10/8/2026